1979 ஏப்ரல் 20]

ஆ. மின்சாரத்துறை அமைச்சர்மீது—(தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலை அளித்தார் என்று கூறி உரிமை பிரச்சினை ஒன்றை அவையில் எழுப்பினார். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தனது விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் நாள் அன்று அவையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு விளக்கம் அளிக்கையில், 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10ஆம் நாள் அன்று இருந்த நிலவரத்தைப் பற்றிய தகவல் அவைக்கு அளிக்கப்பட்டது என்று கூறியுள்ளார். உறுப்பினர் 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ஆம் நாள் அன்று சிலர் கைது செய்யப் பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனவே, 17ஆம் தேதி அவைக்குக் கொடுக்கப்பட்ட தகவல் 10ஆம் தேதி இருந்த நிலையைப் பற்றியதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த அறிவிப்புக் கொடுக்கப்பட வில்லை என்பது தெளிவாகிறது. எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

இம்மாதிரியான நிலைகளில், அவைக்கு எந்தத் தேதியில் தகவல் கொடுக்கப்படுகிறதோ, அந்தத் தேதியில் என்ன நிலை என்பதை அரசு விளக்குவது நல்லது. இல்லை என்றால், அளிக்கப்படும் தகவல் எந்தத் தேதி நிலவரப்படி என்பதை அவைக்கு அறிவிப்பது பொருத்தமாக இருக்கும். அவ்வாறு செய்திருந்தால் இப்பிரச்சினை எழுந்திருக்காது. எனவே, கவன ஈர்ப்பு அல்லது வேறு பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கும்போது அத்தகவல் எந்தத் தேதி நிலவரப்படி எனபதையும் சேர்த்துக் கூறுவது நலமாக இருக்கும் என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு.

சிமெண்ட் தட்டுப்பாட்டினால் லட்சக் கணக்கான கட்டடத் தொழிலாளர்களின் வேலை இழப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு. அம்பிகாபதி, திரு. கூ. ச. முருகேசன், திரு. செ. இராமலிங்கம் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் திரு. மு. அம்பிகாபதி. .